# திருமலைத்தீபம்

Thirumalaitheepam

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

சுடர் – 31
விலை ரூபாய் 20.00

தீபம்-31 | ஆவணி இதழ்-2016,
ஆரம்பம் 15 மாசி-2013.

திருமறைக்கல்வி நடுநிலையம்,
இல: 297 டொக்கியாட்வீதி, திருகோணமலை.

E-mail : catetcota@gmail.com
T.P : 026 222 1022, 026 320 2532


"ஆண்டவர் தாம் செய்யும் அனைத்திலும் நீதியுடையவர் (தி.பா : 145 - 17)"



## ஆயரின் செய்தி

**கிறிஸ்துவில் அன்புள்ள வாசகர்களே,**

கிறிஸ்து இயேசுவில் இனிய நல்வாழ்த்துக்கள்!

திருமலைத்தீபம் மூலமாக மீண்டும் உங்களைச்சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். ஆயராகி ஒரு ஆண்டு நிறைவில் நன்றியுணர்வோடு நடைபெற்று முடிந்த நிகழ்வுகளை திரும்பிப் பார்க்கிறேன். ஆண்டவரின் அருட்கரம், வழிகாட்டல், பாதுகாப்பு, ஞானம் எப்போதும் என்னுடன் இருந்துள்ளது என்பதை உறுதியாக கூறமுடியும்.

யூலை மாதம் 25ம் திகதி ஒருவருட நிறைவை சிறப்பிக்க சில நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அன்றுகாலை இறையிரக்கத் திருத்தலத்தில் இறையிரக்கதியான இல்லம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவமும் வாசிகசாலை திறப்பு விழாவும் நடைபெற்றன. அன்று மாலை 5.00 மணிக்கு தூய மரியாள் பேராலயத்தில் நன்றித் திருப்பலியும் பேராலய மண்டபத்தில் வாழ்த்து நிகழ்ச்சியும் நடைபெற்றது. அவ்வேளையில் இரு விடயங்கள் ஆரம்பித்துவைக்கப்பட்டன.


01. மறைமாவட்டத்திற்கான வலைத்தளம் (Website) மறைமாவட்ட சரித்திரம், செய்திகள், பங்குகள், திருப்பலி நேரங்கள், குருக்கள், துறவறத்தவர் பற்றிய விபரங்கள் ,ஆயரின் பணி, திட்டங்கள் என பல விடயங்களை இவ் வலைத்தளத்திலிருந்து பார்க்கலாம். அதன் முகவரி: dioceseoftrincomalee.org ஏற்கேனவே மறைமாவட்டத்திற்கென முகநூல் (facebook) செயலில் உள்ளது. அதன் முகவரி dioceseoftrincomalee இதிலும் மறைமாவட்டம் பற்றிய பல விடயங்களையும் விவிலிய சிந்தனைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

02. மறைமாவட்ட அன்புப் பணி Diocesan charity, ஆன்மீகத்தில் நாம் வளரும் அதே வேளை வறுமையில் வாடும் எமது சகோதர சகோதரிகளுக்கு கைகொடுக்கும் விதத்தில் இந்த முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. அனைவரது தாராள பங்களிப்போடு நாம் ஓர் நிதியத்தை உருவாக்கி அதன் மூலம் தேவையில் இருப்பவர்களைத் தெரிவு செய்து உதவுவது இதன் நோக்கம். இதன் முதற் செயல்பாடாக யூலை 25ம் திகதி வறுமை காரணமாக சிறையிலிருந்து விடுவிக்கப்பட முடியாத ஒரு கைதிக்குரிய பணத்தை நாமே செலுத்தி அவரது விடுதலைக்கு வழிவகுத்தோம். அதேபோல் மேலும் ஆறு கைதிகள் விடுதலை செய்யப்பட இருக்கிறார்கள். எமது தொடர்ச்சியான பணியாக மாதம் இரண்டு குடும்பங்களுக்கு ரூபா 5,000/- பெறுமதியான உலர் உணவு பொருட்கள் கொடுத்தல் ,அதே போல நிதி வசதிக்கேற்ப வாழ்வாதார உதவிகளையும் தேவையிலிருப்பவர்களுக்குக் கொடுத்தல். இப்பணி வெற்றியளிக்க நீங்கள் செபிக்கவும் உங்கள் பங்களிப்பையும் செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன். இதற்கென பொதுவான வங்கிக் கணக்கைத் திறந்துள்ளோம். முகநூலும் (facebook) உள்ளது. இதில் மறைமாவட்ட அன்புப்பணி பற்றிய விபரங்களை அறிந்துகொள்ளலாம். விபரம்:

Seylan Bank, Trincomalee Branch. Ac.No. 0880-12709072-101
முகநூல்: diocesancharity

☞ தொடர்ச்சி 3ம் பக்கம்

## ஆயர்த்துவ பணியின் ஓர் ஆண்டு நிறைவு



எமது மறைமாவட்டத்தின் ஆயர் அதி.வண.கலாநிதி கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்கள் கடந்த 25.07.2016 அன்று தனது ஆயர் நிலைப்பணி வாழ்வின் ஒரு வருட பூர்த்தியை நிறைவு செய்தார்.

இந் நிகழ்வினைச் சிறப்பிக்குமுகமாக தூய மரியாள் பேராலயத்தில் ஆயர் தலைமை யிலான கூட்டுத்திருப்பலி ஒப்புகொடுக்கப்பட்டது. அதன் பின் ஆயர் அவர்கள் பாண்ட் வாத்திய இசையுடன் விசேட நிகழ்வுகளுக்காக விருந்தினர் மண்டபத்துக்குள் அழைத்து வரப்பட்டார். அங்கு அவரைப் பற்றிய சிறப்பு நிகழ்வுகள் இடம்பெற்றன. இவற்றில் முக்கியமான நிகழ்வாக திருகோணமலை மறைமாவட்டத்திற்கென இணையத்தளம் (website) ஒன்றும் ஆயர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்வில் மறைமாவட்டத்திலுள்ள பங்குகள் அனைத்திலுமிருந்து அருட்பணி யாளர்கள் அருட்சகோதர சகோதரிகள் இறைமக்கள் வருகை தந்து ஆயரின் ஆசீரைப் பெற்று அவரை வாழ்த்திச் சென்றனர்.

**ஆயரின் பணிவாழ்வு மேலும் சிறப்புற வாழ்த்துகிறோம்.**

## திருகோணமலை மறைமாவட்டம் ஆரம்பிக்கப்பட்ட 123 ஆண்டுகள் (1893.08.25)

திருகோணமலை மறைமாவட்டமாகி 123 வருடங்கள் நிறைவடைகின்றது. இதைக் குறிக்கும் முகமாக அனைத்து ஆலயங்களிலும் திருப்பலியின் போது விஷேடமாக மறைமாவட்டத்திற்காக செபிக்கும் படியும்.

2017ம் ஆண்டு அதே தினத்தில் யூபிலி ஆண்டு மறைமாவட்ட ஆயரினால் பிரகடனப்படுத்தப்படும்.



தகவல் : ஆயர் பணிமனை
திருகோணமலை.

"உம் சொற்கள் என் நாவுக்கு எத்துணை இனிமையானவை (தி.பா :119 — 103)"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்களோடு பேசுகிறேன்...

அருட்பணி. N.C. அருள்வரதன்

புதிய மாதம் ஆவணி இம் முறையும் உங்களோடு பேசுவதற்கு எனக்கு ஒரு வாய்ப்பு பெருமகிழ்வே. இம்மாத நிலைகளிலே ஞான நிலைகளை நோக்கும் போது பல நிகழ்வுகளை சிந்திக்கின்றோம் நினைவு படுத்துகின்றோம்.

குறிப்பாக இம்மாதம் ஆறாம் திகதி ஆண்டவரின் தோற்றமாற்ற விழா வைக் கொண்டாடுகின்றோம். பதினைந்தாம் திகதி அன்னை மரியாளின் விண்ணேற்புப் பெருவிழாவைக் கொண்டாடுகின்றோம்.

அதே போன்று ஏழாம் திகதி தூய பிரான்சிஸ் சவேரியாரின் விழாவை கும்புறுப்பிட்டி மக்கள் கொண்டாடுகின்றார்கள். அன்னை மரியாளின் விண்ணேற்புப் பெருவிழாவினை மரியாள் பேராலய மக்கள் சிறப்புற இணைந்து கொண்டாடுகின்றார்கள்.

இருபத்தோராம் திகதி தூய வேளாங்கண்ணி ஆலய மக்கள் தங்கள் பங்கான பள்ளத்தோடத்திலே கொண்டாடிச் சிறப்பிக்கின்றார்கள். இதே போன்று இதே தினத்திலே அன்புவழிபுரம் இறை மக்கள் சதாசகாய அன்னையின் விழாவையும் கொண்டாடுகின்றார்கள். இருபத்தெட்டாம் திகதி சதாசகாய அன்னையின் விழாவை முள்ளிப்பொத்தானை இறைமக்களும் கொண்டாடிச் சிறப்பிக்கும் அனைத்து மக்களுக்கும் எமது நல்வாழ்த்துக்கள்.

இம்மாதம் ஆறாம் திகதி உலக சமாதான தினம் கொண்டாடப்படுகின்றது. கலக்கங்களும் மோதல்களும் குண்டு வெடிப்புகளும் என்று அமைதியைக் கலைக்கவென்று ஒரு சில தீவி ரவாதிகள் முனைந்து செயற்படும் போது அமைதியை நிலை நாட்ட வேண்டுமென்றும் பாடுபடுகின்றவர்களையும் நாம் மறந்து விடமுடியாது. உலக சமாதான தினத்திலே அனைத்து உள்ளங்களிலும் அமைதியுடன் கூடிய சமாதானம் பிறந்து வளரவேண்டுமென்று இறைவனை வேண்டுவோம்.

அரசியல் நிலைகளை நோக்கிப் பார்க்கும் போது பல வேறுபாடு களையும் பிளவுகளையும் கட்சி மாற்றங்களையும் கட்சித் தாவல்களையும் அவதானிக்க முடிகின்றது. மக்களுக்காக மக்களின் மேம்பாட்டிற்காக மக்களின் வாழ்வாதாரத்தை வளர்ப்பதற்கான பணி நிலையாக அரசியல் மாறுமானால் நிச்சயமாக வளமான செல்வமாக அதனை நாங்கள் ஏற்கமுடியும் "சுயநலம்" "எனக்கு" "தனக்கு" என்னும் நிலைகள் வளரும் போது மனிதாபிமானங்கள் மறைந்து கொள்ள அடக்கு முறைகளும் ஆணவங்களும் மேலோங்க பிற்போக்கான அரசி யலே உருவாகும் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்

ஆன்மீக நிலைகளிலே பங்குகளிலே பெயர் கொண்டவர்களின் வருடாந்த திருவிழாக்களைக் கொண்டாடுகின்றோம். விழாக்கள் மனங்களை மகிழ்விக்கின்றன. அதேவேளை அந்த விழாவானது குறிப்பிட்ட புனிதரின் விழாவினால் நமது வாழ்விலே மாற்றம் ஏற்பட வேண்டும். இறைவனை நோக்கிய பாதைகளில் திருப்பத்தை ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் நாம் கொண்டாடும் விழாவானது நமது வாழ்வுக்கு அர்த்தத்தைத்தரும் என்பது உண்மையாகும்.

பொதுநிலை வாழ்வினை நோக்கினாலும் பொதுவான நன்மைகளையும் பொதுவான வளங்களையும் பொதுவான வெற்றிகளையும் பொதுவான நியாயங்களையும் நீதிகளையும் மையப்படுத்தி நகரும் போது நன்மைகளே விளைவாகும் எனக்கூறி மீண்டும் உங்களோடு பேசுவேன் எனக் கூறி நிற்கின்றேன்.

### கல்வி

கடிக்க கடிக்க கரும்பாக
காலம் முழுவதும் எறும்பாக
இனிமையான கல்வியினை
ஈரத்துடனே கற்றிடுவோம்
உலகம் முழுவதும் சுற்றி பறக்க
ஊக்கம் தரும் கல்விதனை
உண்மையாக கற்றிடுவோம்
ஊரெல்லாம் சிறப்பு பெற்றிடுவோம்

ஆக்கம்: ரி. ஜெரோம்
தூய யோசேப்வாஸ் சிறிய குருமடம்
திருகோணமலை.

## திருச்சபையில் பொதுநிலையினர் அடையவேண்டிய குறிக்கோள்கள்.

குறிக்கோள் இல்லாத வாழ்க்கை மாலுமி இல்லாத கப்பலைப் போன்றது என்பார்கள். எமது கிறிஸ்தவ வாழ்விலும் எம் அனைவருக்கும் ஓர் குறிக்கோள் உள்ளது. அது உலகெங்கும் சென்று நற்செய்தியை அறிவிப்பதாகும். திருமுழுக்கு, உறுதிப்பூசுதல் வழியாக ஆண்டவராலேயே மறை தூதுப்பணிக்கென நியமிக்கப்பட்டவர்கள். பொதுநிலையினராகிய நாம் அதற்கான பாதையையும் அறிவும் சரிவர எமக்கு கொடுக்கப்பட்டது மல்லாது தகுந்த துணையாளரும் எம்மோடு பயணிக்கின்றார்.

கிறிஸ்துவிலும் திருச்சபையிலும் இனம், நாடு, சமூகம், பால் என்பனவற்றில் வேறுபாடில்லை என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்வது மட்டுமல்லாது உணர்த்தவும் வேண்டும். எங்கெல்லாம் இவை உணரப்படவில்லையோ அங்கெல்லாம் எமது குரல் ஓங்கி ஒலிக்கவேண்டும். எம்முள் பற்றி எரிகின்ற உணர்வுத்தீ உணர்வற்றவர்களை சுட்டெரிக்கவேண்டும். தேவை ஏற்படுகின்றபோது அது நிகழத்தான் வேண்டும் "என்னுடைய வீடு செப வீடு என் வீட்டை கள்வர் குகை ஆக்காதீர்கள்" என்று புறா விற்பவர்களை இயேசுக்கிறிஸ்துவே சாட்டையால் அடிக்கவில்லையா? தேவையென்கிறபோது சிலவற்றை செய்யத்தான் வேண்டும்.

இன்று இயேசுவின் இல்லங்கள் உலகம் பூராகவும் பெருகிக்காணப்படுகின்றது. அவற்றையெல்லாம் தூய்மையாக்க வேண்டியவர்கள் நாமல்லவா? சொல்லாலும் செயலாலும் கிறிஸ்துவின் நற்செய்தியை உலகுக்கு வெளியிடுவதும் அவரது அருளைப்பகிர்ந்தளிப்பதுமே திருச்சபையின் அதன் உறுப்பினர் அனைவரின் முதன்மையான திருத்தூதுபணி என்பதை உணர்ந்து சொல்லில் மாத்திரமல்ல செயலி லும் திருத்தூதுப் பணியாற்றவேண்டும். எம்முடைய சொல்லும் செயலும் பிறருக்கு எம்மை கிறிஸ்தவர்கள் என்று காட்டாத விடத்து எவ்வாறு அவர்கள் கடவுள் மீது நம்பிக்கை கொண்டு அவர் பால் ஈர்க்கப்படுவார்கள்.

இக் காலத்தில் எம்முடைய சமயம், ஒழுக்க நெறி, பண்பாடுகள் என்பவற்றை அழிப்பதோடு மட்டுமன்றி கிறிஸ்தவர்களை தம்பால் இழுப்பதற்கு முயற்சிக்கும் கூட்டத்திற்குள்ளும் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். வாழ்க்கை முறையில் அன்றி ஒப்பீட்டு முறையிலும் குதர்க்கமான பேச்சுக்களினாலும் கிறிஸ்தவத்திற்கு எதிரானவர்கள் எம்மை சூழ்ந்து கொள்ளமுனைகின்றார்கள். இவ்வேளையில் கிறிஸ்தவக்கொள்கைகளை விளக்குவதிலும் காப்பாற்றுவதிலும் தத்தம் திறமைகளுக்கும் கல்விக்கும் ஏற்ப நடந்து திருத்தூதுப்பணியாற்ற திருச்சபை பொதுநிலையினரை அழைத்து நிற்கின்றது.

இன்றைய உலகின் வரலாற்றுப்போக்கில் தொழிநுட்ப வளர்ச்சியினால் பொருட்களை பயன்படுத்துவதில் ஏற்பட்ட மாற்றம் அதீத வளர்ச்சி என்பன மக்களின் வாழ்க்கை முறையில் களங்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மனித ஒழுக்கமும் பழக்க வழக்கங்களும் சீரழிந்துள்ளன. கிறிஸ்தவ விழுமியங்கள் காணாமல் போயுள்ளன. இயற்கை அறிவியலின் பால் அதீத பற்றுக் கொண்டு அவற்றுக்கு அடிமையாக்கியவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். தேவைக்கு மாத்திரம் பயன்படுத்தி தேவைகளை பூர்த்தி செய்வதற்குப் பதிலாக அவை இல்லாமல் நாம் இல்லை எனும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றோம்.

பொதுநிலையினர் உலகியல் அமைப்பை புதுப்பிப்பதை தமக்கே உரித்தான கடமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும். என்று திருச்சபை கூறுகின்றது. அன்பால் உந்தப்பட்டு உறுதியாக செயலாற்றி பொறுப்புணர்வோடு எங்கும் எதிலும் இறையாட்சி சார்ந்த நீதியை நிலைநாட்ட உழைக்க வேண்டும்

"கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை மிகவும் நன்றாய் இருந்தன இன்று அறிவியலின் வளர்ச்சியினால் உருவாக்கின்ற அனைத்தும் கடவுள் உருவாக்கியதில் இருந்து உருவா- கியவையே. எனவே எதுவும் கடவுளை மிஞ்சவோ இணையாகவோ ஆகிவிடமுடியாது. பொதுநிலை யினர் உலகியல் அமைப்பை புதுப்பிக்கவேண்டுமே ஒழிய அதற்குள் ஒளிந்து கொள்ளக்கூடாது. இதனையே திருச்சபை விரும்புகின்றது, எதிர்பார்க்கின்றது. இவையனைத்தும் இறையன்பினால் ஊட்டம்பெற்று வலுப்பெறவேண்டும் எம்முடைய ஒவ்வொரு செயற்பாடுகளும் உலகில் திருச்சபை நிலைத்திருக்க துணைபுரியவேண்டும்.

இன்று சமூகத்தொடர்புக் கருவிகள் மிக மிக விரைவாகச் செயற்படுகின்றன. உலக மக்கள் அனைவரும் ஓர் குடும்ப உறுப்பினர்கள் போல் ஆகிவிட்டனர். அடிப்படைத் தேவைகளைக்கூட பூர்த்தி செய்ய முடியாதவர்களையும் அகதிகளாக இடம் பெயர்ந்தவர்களையும் வன்செயல்களால் இடம் பெயர்ந்து நாடு திரும்புகின்றவர்களையும் மதத்தின் பெயரால் வஞ்சிக்கப்படுவர்களையும் தேடிச் சென்று அன்பு காட்டி ஆதரவாகப்பேசி எம்மால் எவ்வளவு இயலுமோ அவற்றை அவர்களுக்கு செய்யவேண்டியது கிறிஸ்தவர்களாகிய எமது கடமையும் பொறுப்புமாகும். இவற்றையெல்லாம் நாம் கிறிஸ்துவிற்கே செய்கின்றோம். இது தான் சொல்லிலும் செயலிலும் திருத்தூதுப்பணி ஆற்றுவதாகும்.

நாம் செய்கின்ற உதவி மூலம் பயன்பெறுகின்றவர் தன்னிறைவு அடையவேண்டும். அவ்வாறானதாக எம்முடைய செயல் இருக்கவேண்டும்.' அவர் இன்னொருவருக்கு உதவவேண்டும். இது பல்கிப்பெருக வேண்டும். பெறுவதிலும் பார்க்க கொடுப்பதில் தான் இன்பம் என்பதை அனைவரும் உணர வேண்டும்.

பொது நிலையினர் தனியாகவோ, இணைந்தோ தேவையில் உள்ள அனைவருக்கும் எதையும் செய்யத் தயாராக இருக்கவேண்டும். சமாரியனைப் போல அன்பு செய்து பின்பு எதையும் செய்பவனாக இருக்கவேண்டும். இவ்வுலக கிறிஸ்தவ வாழ்வின் தேவைகளை குறிக் கோள்களை உணர்ந்து வாழ்வோம். இரக்கத்தின் ஆண்டில் அனைவரையும் வாழ வைப்போம்.

ஆக்கம் : திரு:நா.சுரேஸ்
ஆலய வீதி, மூதூர்-03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரக்கத்தின் ஆண்டு சிறப்புப் போட்டிகள்

## முதலிடம் பெற்ற சிறுகதை

### உயர்ந்த உள்ளம்



இரு கை எடுத்து கூப்பி வருக! என வரவேற்கும் அவ் ஒற்றை வீதியின் இருமருங்கிலும் அடர்ந்த பற்றைக் காடுகள். என் கால்கள் செல்லும் வழியில் நானும் சென்று கொண்டிருந்தேன். அங்கே என் கண்ணுக்கு எட்டிய தூரத்தில் குடிசை வீடுகள், நான் ஒவ்வொரு வீடாக சென்று கொண்டிருந்தேன். என் நண்பன் பீற்றர். அவன் வீடு எதுவாக இருக்கும் என்ற சிந்தனையுடன் செல்லும் வழியில் சுடப்பட்ட சுண்ணாம்புக்கல் கொண்டு கட்டப்பட்ட ஓலைக் கூரையினால் அமைக்கப்பட்டு இருக்கும் அவ்வீட்டின் வாசல் கதவின் அருகே மூன்று பெண் குழந்தைகள். ஆம்! அவர்கள் எதையோ இழந்தது போல் வீதியை நோக்கி வழிமேல் விழிவைத்து காத்து கொண்டிருந்தனர். நான் அப்பிள்ளைகளை பார்த்து இது பீற்றரின் வீடா? என கேட்க அவர்கள் குதூகலத்துடன் அம்மா அம்மா என அலறி அடித்துக் கொண்டு வீட்டினுள் புகுந்தனர். நான் என் நண்பனை நினைத்த வண்ணம் அவ்வீட்டு வாசலிலேயே நின்று கொண்டிருந்தேன். அப்பிள்ளைகள் வீட்டினுள் சென்ற அடுத்த கணமே உள்ளிருந்து தவிப்புடன் வாங்க வாங்க என மகிழ்ச்சி பொங்க அவனின் வீட்டின் கதவு அருகே சென்றதும் அப்பிள்ளைகள் மூவரும் அவ்வீட்டு அறையின் உள்ளே சென்று கதவு இல்லாத யன்னல் ஊடாக தம் கண்களை என்னை நோக்கியபடி வைத்து பார்த்துக் கொண்டு நிற்கின்றனர். நான் அப்பிள்ளைகளின் நிலையைக் கண்டதும் பீற்றர் இறந்த செய்தியை என்னால் கூற முடியவில்லை. அப் பெண் மேரி அ... நீங்க பீற்றர்ட நண்பனா? இருங்க என்று கூறிய வண்ணம் வீட்டு அறைக்குள சென்று நாற்காலியை கொண்டு வந்து தந்தாள். பிறகு என்னவாம் பீற்றர் எப்படி இருக்கிறான் என அவள் என்னை வினவ தொடங்கினாள். என்னால் இக்குடும்ப நிலையைப் பார்த்ததும் பீற்றர் பற்றி எதுவும் கூற எனக்கு வார்த்தை வராதவனாக நான் கதையை மாற்றினேன். உங்கட பிள்ளைகள் நலமாக உள்ளார்களா? என கேட்ட வண்ணம் அவ்வீட்டை சுற்றும் முற்றும் பார்த்தேன். அவ்வீட்டின் மூலையிலே இரண்டு அல்லது மூன்று நாட்கள் உலை வைத்து உணவு உண்டதைப் போல பானை அலசி வைக்கப்ட்டு இருந்தது. நான் மேரியை நோக்கி நீங்க இண்டைக்கு மதியம் சமைக்கலயா என்று கேட்டேன். அவளிடம் என் கேள்விக்கான பதிலை காணாதவளாய் மழைத்துளி வீழ்வது போல அவளின் கண்களில் இருந்து கண்ணீர் வடிவதைக் கண்ணுற்றேன். அப்போதும் நேரம் 1.30 தாண்டி இருக்கும் அவளை நான் சமாதானப்படுத்தியவளாக அவளிடம் குடிக்க தண்ணீர் தாங்க என கேட்க, அவளும் செம்பை கையில் எடுத்த வண்ணம் அவ்விடத்தை விட்டு நகர்ந்தாள். என்னால் இத்துன்பத்தினை பார்க்க முடியவில்லை. நான் அப்பிள்ளைகளை வாங்க என என் அருகே அழைக்க அவர்களும் ஆவலோடு என் பக்கத்தில் வந்து அங்கிள் அப்பா எதுவும் தந்து விட்டாரா? என்று கேட்ட வண்ணம் நான் எனக்கென கொண்டு வந்த பெட்டியையும் பையையும் கண்ணுற்றனர். மேரி நீர்கொண்டு வருவதைக் கண்டதும் அப்பிள்ளைகள் மறுபடியும் வீட்டினுள் புகுந்தனர். நான் நீரை அருந்திக் கொண்டதும் அவள் என்னை நோக்கி நீங்க யார்? எண்டு சொல்லவேயில்ல நீங்க... பீற்றருக்கு தெரிந்தவரா? அல்லது நீங்க யார்? என என்னை ஆராய தொடங்கினாள். நான் பீற்றரின் நண்பன் தான் என கூறியதும் அவள் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தவளாக தான் நின்ற இடத்தை விட்டு நகர்ந்து என் அருகே வந்து அ சொல்லுங்க அவர் எப்படி இருக்கின்றார். அவரை நான் எப்போ என் கண்களினால் பார்க்கப் போகின்றேன். என்று தன் இரு கைகளையும் விரித்தபடி அண்ணாந்து பார்த்தபடி கூறினாள். மீண்டும் மகிழ்ச்சியுடன் கடிதம் ஏதாவது தந்து விட்டாரா அல்லது உங்களிட்ட ஏதும் தந்தவரா? என வார்த்தைகளை இழுத்தாள். நான் என்னை ஆசுவாசப்படுத்தியவனாக அவளை நோக்கி ஓ... அங்க பீற்றர் நல்லா இருக்கின்றான். அவனுக்கென்ன நல்ல வாழ்க்கை என கூறியதும் அப்பிள்ளைகள் சந்தோசத்துடன் அங்கிள் அப்பா எப்ப வருவாரு என கேட்டனர். நானும் அவன் நிறைய உங்களைப் பற்றி அடிக்கடி என்னோடு பேசிக் கொள்ளுவான் என அப்பிள்ளைகளின் மேரியின் முகத்தில் பூத்த புன்னகையை மாற்ற முடியாதவனாக கூறினேன். நான் என்னால் இயன்றவரை அவர்களை சமாதானப்படுத்த இயற்றிய வார்த்தைகளை விட அவர்கள் ஒரு வார்த்தையே காத்திருந்தது. அப்பா எப்ப வருவாரு என்ற பிள்ளைகளின் கேள்வி மேரியின் கேள்வி என் கண் போன்ற கணவர் எப்போ நாடு திரும்புவார் என்ற வினா தான் அது. நான் என்னிடம் இருந்த பணத்தினை எடுத்து இந்தாங்க உங்கட பீற்றர் தான் இந்தப் பணத்தை உங்களிடம் கொடுக்க சொன்னான் எனக் கூறி பணத்தை கையை விட்டு எடுத்ததும் உடனேயே மேரி ஆண்டவரே! எங்களுக்கு எந்தப் பொருளோ பணமோ தேவையில்லை. பீற்றரை நாங்க பார்த்தா போதும். அவர் எங்களோடு சேர்ந்து வாழ்ந்தால் நாங்க நால்வரும் என் பீற்றரும் கூழோ கஞ்சியோ காச்சி குடித்து விட்டு சந்தோசமாக வாழுவோம் என அலறினாள். அப்பிள்ளைகள் அவ்விடத்தை விட்டு நகர்ந்து என் அருகே வந்து அங்கிள் அங்கிள் அப்பா எனக்கு என்ன தந்தாரு, எனக்கு என்ன தந்தாரு என கேட்டனர். நான் உங்க அப்பா உங்க எல்லோருக்கும் பொருட்கள் தந்து விட்டார் எனக் கூறியதும் மேரி என்னை நோக்கி பீற்றர் எப்ப வருகிறார் ஏதும் உங்களிட்ட சொன்னாரா? எனக் கேட்டாள். நான் என்ன சொல்வது என்று திகைத்துப் போய் இருந்தேன். அவள் மீண்டும் என்னை நோக்கி என்ன பேசாமல் இருக்கிறீங்க பீற்றருக்கு ஏதும் நடந்து விட்டதா என வினவினாள். நான் இதிலிருந்து என்னை மீட்டவனாக அவனை வேலை பார்க்கின்ற கம்பனியில் இருந்து வேற ஒரு கம்பனிக்கு மாற்றி இருக்கிறாங்க.

தொடர்ச்சி 6ம் பக்கம்....☞

கவிதைப் போட்டி (மலைப்பொழிவு)

## மூன்றாம் இடம் பெற்ற கவிதை

பேறுகள் பல்லாயிரமானாலும்
இயேசுவின் போதனை எட்டும்
வாழ்வில் அர்த்தங்கள் சொல்லி
மனிதனை மனிதனாக
வாழ அழைத்தது
இரக்கத்தை சுவாசிக்க சுவைக்க
பாதைகள் காட்டியதும்
மாவீரன் இயேசு காட்டிய ஆயுதமாக எட்டுமே-இன்று
உலகின் இரக்கத்தின் வேர்கள்.

ஆக்கம்: எஸ்.ஏஞ்சல் விக்டரின்.
பாலையூற்று.

## சிறுகதைப் போட்டி முடிவுகள்

பங்குபற்றியவர்கள் : 10பேர்

**பரிசுக்குரியவர்கள்**

1ம் பரிசு. 2000/=ரூபா
ச.மொறிஸ்ரெலா.
இல:74, அன்னை வேளாங்கன்னி வீதி
பாலையூற்று, திருகோணமலை.

2ம் பரிசு.1500/=ரூபா
திருமதி. ஜோசப் ஜெபநாயகம்அனஸ்ரிஅமலராணி
இல:101காந்தி நகர்
அன்புவழிபுரம், திருகோணமலை.

3ம் பரிசு1000/=ரூபா
செல்வி. புளோரிடா ஜேசுதாஸ் நவிரட்ணசீலன்,
இல:37/6 நீதிமன்றவீதி, திருகோணமலை.

பங்குபற்றிய அனைவருக்கும் பாராட்டுக்களும் நன்றிகளும்

*குறிப்பு: பரிசுக்குரியவர்கள் தங்களது பரிசில்களை திருமறைக்கல்வி நடுநிலைய அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*

## இரக்கம் என்பது கடவுளின் திருப்பெயர்

**யூபிலி ஆண்டின் சிறப்பு விவிலியத் தொடர்-1**

"இரக்கம்" என்பது இறைவனின் திருப்பெயர். அது உள்ளம் உருகி உதவும் மனதன் இறைமொழி. இருபத்தி ஆயு யூபிலி விழாக்களை திருச்சபை கண்டுள்ளது.எனினும் இன்றைய வியாபாரமும் வன்முறையும் அடக்குமுறையும் ஆக்கிரமிப்பு போர் குணமும் மிக்க உலகில் இரக்கத்தின் யூபிலி ஆண்டு ஒரு வசந்ததென்றலாக வந்து ஒவ்வொரு இதயக் கதவையும் இதமாகத்தட்டுகின்றது இறைத் தந்தையை போல இரக்கமுள்ளவர்களாக வாழ அழைப்பு விடுக்கும் திருத்தந்தை இரக்கத்தினால் இவ்வுலகை இனிதான வாழுமிடமாக மாற்ற அழைப்பு விடுக்கின்றார். இறைவனின் இரக்கமுகத்தை விவிலிய வரிகளிடையே தேடிப்பார்த்து வாழ தூண்டுவதே இந்த சிறப்புத் தொடரின் முக்கிய நோக்கம்.

"இன்னும் கொஞ்சம் சோறு போடுங்கப்பா என்று அழுது அடம்பிடித்த சிறுமியை அடித்தே கொன்றிருக்கும் கொடுமையை படித்தபோது நெஞ்சம் பதறிப்போனது. அடக்குமுறையை எதிர்த்து இந்தியாவிடமிருந்ததல்ல இந்தியாவுக்குள்ளேயே எங்களுக்கு விடுதலைத் தேவையாயுள்ளது என முழக்கமிட்ட ஜவஹர்லால்நேரு பல்கலைகழகத்தின் மாணவரை நீதிமன்ற வளாகத்திலேயே அடித்து தாக்கி அச்சுறுத்தியிருக்கிறார்கள். ஆயுதமும் அடக்குமுறையும் வன்முறையை மட்டும் நம்பி களத்தில் இறங்கும் பல உள்ளங்களுக்கு மாற்றுக் கலாச்சாரத்தையும் வாழ்வின் புதிய பக்கங்களையும் விவலியம் புரட்டிக்காட்டுகினறது என்றால் அது மிகையில்லை. இன்றைக்கு நமது அத்தியாவசியமானத் தேவை "அன்பும் கனிவும் மிக்க இறைத்தந்தையை நாம் கண்டு உள்ள உறுதி பெற்றால் இந்த உலகை அன்பால் நிரப்ப நாம் ஆயத்தமாவோம்.

**1.தொடக்க நூலில் இறைவனின் இரக்கமுகம்**

படைப்பு பற்றி பேசும் தொடக்க நூலில் "இரக்கம்" பற்றிய வார்த்தைகள் இடம் பெறவில்லை.எனினும் அங்கு நாம் சந்திக்கும் இறைவன்-இனியவர் கனிவானவர் இரக்கமுள்ளவர் என்ற செய்தி நம்மை மகிழவைக்கின்றது. எபிரேய மொழியில் இரக்கம் என்ற இனிய இந்த தமிழ் சொல்லுக்கு ரவறாமிம் (RAHAMIM) வெறசட் (Hesed) "வெறன் (Hen) என்று மூன்று சொற்கள் உள்ளன. இம் மூன்று சொற்களும் இறை இரக்கத்தின் மூன்று இனிய பரிமாணங்களை விளக்கிக்காட்டுகின்ற "ரவறிம்" (ஒருமை) அல்லது "ரவறாமிம்" (பன்மை) என்ற சொல்லுக்கு இருபொருள் உள்ளது. (1) இரக்கம் (2) அன்னையின் கருவறை. உண்மையில் உலகில் தாயின் கருவறைபோன்ற இரக்கமுள்ள இனிய இடம் வேறுண்டோ என்றால் இல்லை என்பதே நமது விடை. மறவாது பால் நினைந்தூட்டும் தாயினும் அன்புமிக்க இறைவனின் அன்புக்கும் இரக்கத்தை அமுதாக்கி இன்னொரு வாழ்வை ஈன்றெடுக்கும் தாயின் கருவறைக்கும் ஒரே வாரத்தை வருவது இனிக்கிறது (எசா49:15) தன்னை முழுவதும் ஆத்மார்த்த அன்பில் கையளிக்கும் கணவன்-மனைவியின் அன்பு வியாபாரத் தனமற்றது வியாபாரமில்லாதது .அதனை உடன்படிக்கை யின் அன்பாக விவிலியம் பார்க்கிறது (ஓசே அதி1-3) இந்த அன்பு தான் வெறசட் (Hesed) என்று எபிரேயத்தில் அழைக்கப்படுகின்றது. இறைவன் இஸ்ரயேலை தன் அன்புக்குறியவளாக மனைவியாக பாவித்து வழி நடத்து வதை இறைவாக்கினர்கள் உடன் படிக்கையின் அன்பாக அடையாளம் கண்டார்.

பிறரின் உடல் வலிமையை நம் உள்ளத்தில் உணர்ந்து உதவ ஒடோடி சென்றால் அது கனிவான அன்பு அருள் கூரும் அன்பு என்றழைக்கப்படுகின்றது. இதை குறித்துக் காட்டுவது தான் வெறன் (Han) எனப்படும் எபிரேய சொல்லாகும் இதை ஆங்கிலத்தில் "(to be gracious) என்று சொல்வர் இம் மூன்று சொற்களில் எதுவும் இடம் பெறவில்லை எனினும் இச் சொற்கள் குறித்துக் காட்டும் செயல் நிலைகளை இறைவனின் படைப்புச் செயல்களில் கண்டுணர்கின்றோம்.

**தொடரும்.......**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இரக்கத்தின் தூதர்கள் - அறிமுகம்



'ஒருவர் முத்திப்பேறு பெற்றவர் அல்லது அருளாளர் என்றோ, புனிதர் என்றோ அறிவிக்கப்படும் போது அது அப்பழுக்கற்ற உன்னதத்தைப் பற்றிய அறிவிப்பு அல்ல அந்த மனிதர் எவ்விதக் குறையும், பாவமும் அற்றவர் என்ற அறிவிப்பும் அல்ல. ஆனால் அருளாளராக, புனிதராக ஒருவர் அறிவிக்கப்படும் போது அவர் கடவுளின் கருணையை இறைவனின் இரக்கத்தைச் சார்ந்து அவருடன் வாழ்ந்தார். கடவுளின் சக்தியை நம்பி தன் வாழ்க்கையைத் தொடர்ந்தார். முடியாதது என்பதும் முடியும் என்ற நம்பிக்கையில் வாழ்ந்தார். தன் பகைவர் களையும் தன்னைத் துன்புறுத்தியவர்களையும் மன்னித்து வாழ்ந்தார். வன்முறைகள், தீமைகள் அவரைச் சூழ்ந்தாலும் இறைவன் மீது நம்பிக்கை இழக்காமல் வாழ்ந்தார். இறுதியில் அவர் இவ்வுலகம் விட்டுச்செல்லும் போது அதை இன்னும் சற்று அழகுமிக்கதாய் விட்டுச் சென்றார். என்பதே அந்த அறிவிப்பில் அடங்கியுள்ளது. இவ்வாறு கனடாவில் உப்பும் ஒளியும் (Salt and Light) என்ற ஒரு தொலைக்காட்சி மையத்தை நடத்திவரும் அருள்பணியாளர் தாமஸ் ரொசிக்கா (Thomas Rosica) என்பவர் வெளியிட்டுள்ள கனடா நாட்டிற்கான புனிதர் - இரண்டாம் ஜான் பால் (John Paul II – A Saint for Canada), என்ற ஓர் அழகிய நூலின் அறிமுகப்பக்கங்களில் அவர் எழுதியுள்ள சில எண்ணங்கள் இவை. ஒருவரின் புனிதத்தைப் புரிந்துகொள்ள இவை உதவியாக உள்ளன.

அன்பர்களே! அருள்பணி ரொசிக்கா அவர்கள் எண்ணப்படி கத்தோலிக்கத் திரு அவையில் ஒருவர் புனிதர் என்று அறிவிக்கப்படும்போது அந்த மனிதர் எவ்விதக் குறையும் இல்லாதவர் பாவம் எதுவும் செய்யாதவர் என்று அர்த்தம் அல்ல. ஆனால் அவர் கடவுளின் கருணையை இறைவனின் இரக்கத்தைச் சார்ந்து கடவுளோடு இணைந்து வாழ்ந்தார் என்பதாகும். இப்படி அந்த மனிதர் வாழ்ந்ததோடு அதைத் தனது வாழ்விலும் வெளிப்படுத்தினார் என்பதாகும். புனிதர்கள் இறைவனின் இரக்கத்தைத் தங்கள் வாழ்வில் சுவைத்ததோடு அதைப் பிறரும் அனுபவிக்கச் செய்துள்ளனர். திரு அவையில் சிறப்பிக்கப்பட்டு வரும் இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டில் இறைவனின் இரக்கத்தை பல்வேறு சமூக மற்றும் ஆன்மீக இரக்கச் செயல்கள் வழியாக அதிகமாக வெளிப் படுத்துவதற்கு நாம் அழைக்கப்படுகின்றோம். இப்படி வாழ்ந்தவர்கள் இரக்கத்தின் தூதர்கள் இரக்கத்தின் மறைப் பணியாளர்கள் என அழைக்கப்படுகின்றனர். இறை இரக்கம் என்றவுடன் முதலில் நம் நினைவுக்கு வருபவர் அன்னை மரியா. கானாவூர் திருமணத்தில் திராட்சை இரசம் தீர்ந்து விடவே தானாகவே முன்வந்து அக்குறையைத் தீர்த்து புதுமணத் தம்பதியருக்கு ஏற்படவிருந்த அவப் பெயரை நீக்கியவர் அன்னைமரியா. அந்நேரம் தொடங்கி இன்று வரை தம் பிள்ளைகள் துன்புறும்போது அவர்களின் கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருப்பவர் அன்னை மரியா. இதற்கு உலகெங்கும் இருக்கின்ற அன்னை மரியா திருத்தலங்களில் குவியும் பக்தர்களே சான்று.

இரண்டாம் உலகப் போரில் நாத்சிவதை முகாமில் ஒரு கைதிக்காக தனது உயிரைத் தியாகம் செய்தவர் புனித மாக்ஸ்மிலியன் கோல்ப் தென் அமெரிக்காவுக்குக் கொண்டு வரப்பட்ட ஆப்பிரிக்க அடிமைகள் மீது அளவு கடந்த அன்பு காட்டியவர் புனித பீட்டர் கிளாவர். அறுபது இலட்சம் டாலர் செலவழித்து 1,200 ஆபிரிக்க அடிமைகளை மீட்டவர் புனித வின்செட் தெ பவுல் மனநோயாளர்கள் மற்றும் தொழு நோயாளர்களுக்கு இல்லம் அமைத்தவர் இவர். பாதையில் குளிரால் நடுங்கிக் கொண்டிருந்த ஒரு பிச்சைக்காரருக்கு தனது ஆடையை கிழித்துக் கொடுத்தவர் தூர் நகர் புனித மார்ட்டின். வருகிற செப்டம்பர் 4ம் தேதி புனிதர் என அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்படவிருக்கும் அருளாளர் அன்னை தெரேசா அவர்கள் ஆற்றிய இரக்கச் செயல்கள் அவர் வாழ்ந்த போதே அவரைப் புனி தராகப் போற்றச் செய்தன.

அருளாளர் அன்னை தெரேசா கொல்கத்தா நகர் மோத்திஜியில் சேரியில் குடியேறிய இரண்டாம் நாள் அது. முதல் நாள் அந்தச் சேரிக்கு வராத குடிகாரர் ஒருவர் மறுநாள் தனது குடிசைப் பக்கம் வந்த போது ஒரு குடிசையிலிருந்து சில சிறார் வங்காள மொழியில் உரத்த குரலில் அ, ஆ.. எனச் சொல்லிக் கொண்டிருந்தனர். அந்நாள் வரை சேரியில் அவர் கண்டிராத காட்சி அது. சிறா ரின் அந்தச் சப்தம் அக்குடிசைப் பக்கம் அவரை ஈர்த்தது. அவருக்கு மனைவி இல்லை. ஒரு மகன் மட்டுமே. இவர் தன்னிலே நல்ல மனிதர்தான். நன்றாகப் பாடுபட்டு உழைப்பார். ஆனால் குடிக்காமல் மட்டும் அவரால் இருக்க முடியாது. குடித்து விட்டால் எங்காவது விழுந்து புரண்டு கொண்டிருப்பார். கையில் காசு இல்லாமல் குடிக்காமல் இருக்கும் நாள்களில் மட்டும் தனது மகனைப் பார்க்க ஆசை வரும். ஆதனால் குடிசைப் பக்கம் வருவார். அப்படிப்பட்ட ஆசை யோடு இனிப்புப் பதார்த்தங்களை வாங்கிக் கொண்டு அன்று வந்திருந்தார்.

அந்தக் குடிசையைக் கடந்து செல்ல நினைத்தவர் ஒரு கணம் அங்கு நின்று அன்னை தெரேசாவிடம் நீங்க யாரு என்றார். நான் ஒரு ஏழை, நான் ஓர் ஆசிரியை என்றார் அன்னை தெரேசா. ஆமா, பணக்காரங்களா இங்க வருவாங்க என்று அவர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே தனது அப்பாவின் குரல் கேட்டு அக்குடிசையிலிருந்து வெளியே வந்தான் சிறுவன். அப்பா இந்த டீச்சர் ரொம்ப நல்லவங்க பணமில்லாமலே பாடம் சொல்லித்தாராங்க இதற்காகத்தான் இங்கே வந்திருக்காங்க என்றான். குடிகாரரின் கண்களிலிருந்து நீர் கொட்டியது. டீச்சரம்மா தயவு செய்து என் மகன் என்னைப்போல் ஆகக்கூடாது நீங்க தான் காப்பாத்தணும் என்று அன்னையின் கால்களில் வீழ்ந்தார். தான் வைத்திருந்த இனிப்புக்களை அன்னையிடம் கொடுத்தார். அன்னை அவற்றைச் சிறார்க்குப் பகிர்ந்து கொடுத்தார். அந்நாள் முதல் அந்தக் குடிகாரர் குடியை நிறுத்தி புது மனிதரானார். தனது பொறுப்பை உணர்ந்து பணம் சேமித்தார். தனது மகனின் வளர்ச்சியைப் பார்த்து மகிழ்ந்தார். அந்தச் சேரியில் பள்ளி ஒன்றுக்கு அனுமதி கேட்டார் அன்னை தெரேசா அதுவும் கிடைத்தது.

தமிழகத்தில் சாராயக் கடைகள் திறப்பதற்காக வெகுநேரம் வேகாத வெயிலில் காத்திருந்து பகல் 12 மணிக்குத் திறந்தவுடன் குபுகுபுவென முண்டியடித்துக் கொண்டு ஓடிய நம் குடி; மகன்களைத் திருத்த பல அன்னை தெரேசாக்கள் உருவாகட்டும். அன்பர்களே, அன்னை தெரேசா போன்று இரக்கத்தின் தூதர்களாக வாழ்ந்த பல புனிதர்கள் பற்றி இரக்கத்தின் தூதர்கள் என்ற புதிய தொடரில் வழங்குவதற்குத் திட்டமிட்டுள்ளோம். முதலில் அன்னை தெரேசா வாழ்வு பற்றி சற்று விரிவாக வே அடுத்தடுத்த நிகழ்ச்சிகளில் கேட்போம். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கேட்டுள்ளது போன்று தேவையில் இருப்போர்க்கு இரக்கத்தின் தூதர்களாகச் செயல்படுவோம்.

ஆதாரம்: வத்திக்கான் வானொலி

# தூய வனத்து அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா

திருகோணமலை செல்வநாயகபுரம் தூய வனத்து அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா 27.05.2016 அன்று மாலை 05.00 மணிக்கு பங்குத்தந்தை அருட்பணி. S.R. ஜெயரட்ணம் அடிகளாரால் கொடியேற்றி ஆரம்பித்து வைக்கப்பட்டு திருவிழா கூட்டுத்திருப்பலியானது அருட் தந்தை ஜுட்ஜோன்சன் அடிகளாரின் தலைமையில் 05.06.2016 காலை 07.00 மணிக்கு சிறப்பாக ஒப்புக் கொடுக்கப்பட்டது.

இலங்கையில் மிக அரிதாகக் காணப்படும் புனிதரின் ஆலயங்களில் ஒன்றாகவும் இயற்கை வனப்புடனும் திகழும் எம் பங்குத் திருவிழாவின் மையப்பொருளாக இவ்வருடத்திற்கான திருச்சபையின் கருப்பொருளா கிய இரக்கம், அமைந்தது சிறப்பம்சமாகும்.

தினமும் நவநாட்காலங்களில் வழிபாடுகளுக்கு முன்பதாக ஒப்புரவு அருட்சாதனம் வழங்கப்பட்டதுடன் வெஸ்பர்ஸ் வழிபாடுகளின் இறுதியில் நற்கருணைநாதரின் ஊர்வலம் இடம்பெற்று சிறப்பா சீரும் அளிக்கப் பட்டது.

ஆலய திருவிழா ஆரம்பிப்பதற்கு முன்பதாக எம் பங்கின் நீண்ட காலத் தேவையாக இருந்த படிகள் வெளி மறைமாவட்ட பக்தியுள்ள இரு குடும்பங்களின் உதவியுடன் புனரமைக்கப்பட்டமை மேலுமாக திருவி ழாவை மெருகூட்டியது.

மேன்மை மிக்க துறவியாய் திகழ்ந்து மனிதருள் புனிதராய் உயர்ந்த தூய வனத்து அந்தோனியார் அருள் நாடி பெருந்திரளான பக்தர்கள் திரண்டு வந்து புனிதரின் ஆசி பெற்று மன நிறைவுடன் சென்றமை குறிப்பிடத் தக்கது.

தகவல் : வேர்ஜினி பிலிப்

## குட்டிக் கதை ஒன்று... FR NC.

ஒரே இடத்தைச் சேர்ந்த இருவர் பஸ்சிலே பிரயாணம் செய்கின் றார்கள்.இருவரும் அறிமுக மாணவர்கள் ஆனால் இருவரும் ஒருவரோடொ ருவர் பேசுவதில்லை. இவர்களிடையே ஏதோ கோபம்.

பஸ்சிலே இடமில்லாததால் இருவரும் ஒரே சீற்றில் இருக்கிறார்கள். அப்போது பஸ்சிலே கண்டக்டர் ரிக்கட் கொடுத்துக் கொண்டு வருகின்றார். அப்போது இந்த இருவரிலே ஒருவர் பதட்டமாகின்றார். காரணம் 'பேசை' மறதியாக வீட்டிலே விட்டு வந்து விட்டார்.

இப்போது கண்டக்டர் இவர்களுடைய இடத்திற்கு வந்து விட்டார். பணத்தை விட்டு விட்டு வந்தவர் மற்றவரைப் பார்க்கிறார். ஏற்கனவே இருவருக்கு மிடையே பகையும் வெறுப்பும். இவர் காசு கொண்டு வரவில்லை என்பதை மற்றவர் உணர்ந்து கொண்டார். 'நல்ல சந்தர்ப்பம் இவனை மாட்டிவிடுவதற்கு' என்று அவர் நினைக்கவில்லை. தனது பணத்தை எடுத்து கண்டக்டரிடம் கொடுத்து "இரண்டு ரிக்கட்" என்று வாங்கி ஒன்றை மற்றவரிடம் கொடுக்கின்றார். பணத்தைக் கொண்டு வராதவர் 'ரிக்கட்டை' வாங்கிய போது அருகே இருந்தவரின் கையைப் பற்றிக் கொண்டார். இருவரின் கண்களும் கலங்குகின்றன. பகையும் வெறுப்பும் மறைகின்றது.

இப்போது புதிய உறவு பிறந்து விட்டது. மன்னிப்போம், மறப்போம் என்பதை இருவரும் உணர்ந்து கொண்டது மகிழ்வு தானே

## பரிந்துரையாள் அம்மா மாமரியாள்

அம்மா தாய் மரியே தயவாய் கண்ணோக்கிடம்மா
பரிசுத்தமாய் நான் வாழ பரிசுத்தரை அழைத்திடம்மா
மீண்டும் ஒரு வாழ்வு பெற மீட்பரை அழைத்திடம்மா

ஞானத்திலே நானும் வளர்ந்ததில்லையம்மா
ஞானமாய் நானும் நடந்திடவும்
ஞானத்திலே உம் மகனை வளர்த்தது போல்
என்னையும் வளர்க்க முன் வந்திடம்மா
பரிசுத்தரை அழைத்திடம்மா பாவி எனக்காய்
பரிந்துரை பேசிடம்மா



காணாமற் போன ஆடு போல நிற்கின்றேனே
கண்டெடுக்க கர்த்தரையும் அழைத்திடம்மா
மனிதர்கள் என்னை வெறுத்தாலும்
மாறாத அன்பு கொண்ட மாமரி மாதாவே
மறு வாழ்வு நான் வாழ மனு ஒன்றைக் கொடுத்திடம்மா
பரலோகத்தின் தாய் மரியே

பரலோகம் நான் செல்ல பாதை ஒன்றைக் காட்டிடம்மா
உம்மைந்தன் இயேசுவிடம் எனக்காய் பரிந்துரை பேசிடம்மா
தினம் வாழ்ந்திடுவேன் உம் பரிந்துரையால் அம்மா தாய் மரியே

ஆக்கம்:சு. கௌசல்யா
பாலையூற்று,
திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 50 நாடுகளில் அன்னை தெரேசா பற்றிய திரைப்படவிழா

அருளாளர் அன்னை தெரேசா அவர்கள் வருகிற செப்டம்பரில் புனிதராக அறிவிக்கப்படுவதை முன்னிட்டு அன்னையின் வாழ்வு மற்றும் போதனைகளை மையப்படுத்திய திரைப்படவிழா ஒன்று ஏறத்தாழ ஐம்பது நாடுகளில் நூறு இடங்களில் நடைபெறவிருக்கிறது.

இந்தியாவில் சமூகத்தொடர்புத்துறைக்கான உலக கத்தோலிக்க கழகத்தால் ஏற்பாடு செய்யப்படும் அன்னை தெரேசா அனைத்துலக திரைப்படவிழா (MTIFF) வருகிற ஆகஸ்ட் 26ம் தேதி கொல்கத்தாவில் ஆரம்பமாகும். அதன் பின்னர் அடுத்த ஆறு மாதங்களுக்கு உலகின் பல்வேறு பகுதிகளில் நடைபெறும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

நோபல் அமைதி விருது பெற்ற அன்னை தெரேசா அவர்கள் வாழ்வால் தூண்டப்பட்டு எடுக்கப்பட்டு ஆவணப்படங்கள் மற்றும் சிறந்த திரைப்படங்கள் கொல்கத்தாவில் மூன்று நாள்களுக்குத் திரையிடப்படும் என்று அதன் இயக்குனர் சுனில் லூக்காஸ் அவர்கள் கூறினார்.

அதன் பின்னர் இந்தியாவின் டெல்லி, மும்பை, சென்னை, பெங்களூர், உதய்ப்பூர், குவாவறாட்டி, பாட்னா, இந்தோர், ராஞ்சி மற்றும் கேரளாவின் நான்கு நகரங்களில் திரையிடப்படும் என்று மேலும் கூறினார் சுனில் லூக்காஸ்.

பிரிட்டன், மலேசியா, அயர்லாந்து, இத்தாலி, ஆஸ்திரேலியா, தாய்லாந்து, மியன்மார், பங்களாதேஷ், இலங்கை, சீனா உட்பட 50 நாடுகளில் இவ்விழா நடைபெறும். வருகிற செப்டம்பர் 4ம் தேதி வத்திகானில் அன்னை தெரேசா அவர்கள் புனிதராக அறிவிக்கப்படுவார்.

அன்னை தெரேசா அனைத்துலக திரைப்படவிழா அன்னை அருளாளராக அறிவிக்கப் பட்டதுடன் முதலில் 2003லும் பின்னர் 2007 மற்றும் 2010ம் ஆண்டுகளிலும் இடம்பெற்றது.

ஆதாரம் - வத்திகான் வானொலி.

1ம் பக்கத் தொடர்ச்சி....☞

**ஆயரின் செய்தி.....**

கடந்த வருடம் முழுவதும் பல நிகழ்ச்சிகள் நடைபெற்றாலும் மறைமாவட்ட ஆன்மீகம் எமது முதன்மையான இலக்காகும். மறைமாவட்ட ஆன்மீகத்தை தொடர்ந்து கட்டியெழுப்புவதில் நாம் எப்போதும் ஒன்றுபட்டு நிற்கவேண்டும். ஆண்டவரோடு 24 மணிநேரம் எனும் சிறப்பான முயற்சி பெரு வெற்றியளித்தது. 2017ம் ஆண்டு தைமாதம் முதல் ஆண்டவரோடு 12 மணிநேரம் எனும் புதியமுயற்சியை தொடங்கத்திட்டமிட்டுள்ளோம். ஒருமாதம், ஒருபங்கில் இவ் ஆராதனை நடைபெறும். ஆனால் மறைமாவட்டம் முழுவதும் இவ் ஆராதனையின் போது ஒரே சிந்தனையோடு ஒன்றுபட்டிருக்க வேண்டும் இதுபற்றிய மேலதிக விபரங்களை வரும் மாதங்களில் உங்களுக்குத் தருவோம்.

இம்மாதம் 5 முதல் 13ம் திகதிவரை இங்கிலாந்து மற்றும் ஜேர்மனி நாடுகளுக்குப் பயணம் செய்யவுள்ளேன். இப்பயணத்தின்போது இரு கர்தினால்கள்,குருக்கள்,மற்றும் கத்தோலிக்க, இந்துசமூகத்தினரை சந்திக்கவுள்ளேன். எனதுபயணமும் எடுக்கும் ஒவ்வொரு முயற்சிகளும் சந்திப்புகளும் வெற்றியளிக்க செபிக்கும் படிகேட்டுக்கொள்கிறேன்.

இம்மாதம் 15ம் திகதி மரியன்னையின் விண்ணேற்புப் பெருவிழா, பேராலயப்பெருவிழா. மரியன்னையின் விண்ணேற்பு எமது விசுவாச சத்தியம். தனது இவ்வுலக வாழ்நாட்களில் மரியாள் இயேசுவுக்கும் அவரது சீடர்களுக்கும் பெரும் பலமாக இருந்துள்ளார். விண்ணேற்பிற்குப் பின் எமக்காக பரிந்து பேசுபவராகவும் உலக மீட்புக்காக செபிக்கும்படி எம்மிடம் கேட்பவராகவும் உள்ளார். மரியன்னையின் சிறந்த பண்புகளை நாமும் வாழ்ந்து காட்டுவோம்.

4ம் திகதி தூய ஜோன் மேரி வியான்னியின் திருவிழா. ஆன்மீக வாழ்வில் பாரியமாற்றத்தை ஏற்படுத்தியவர் இப் புனிதர். பிரான்ஸ் நாட்டில் ஆர்ஸ் எனும் பங்கிற்கு அனுப்பப்பட்டார். ஒழுக்கத்தில் மோசமாயிருந்த அக்கிராம மக்கள் தூய ஜோன் மேரி வியான்னியின் வருகையை விரும்பா விட்டாலும் அவரது எளிமை, வாழ்வு, செபவாழ்வைப் பார்த்து மனம் மாறினார்கள். அவர் தினமும் பல மணிநேரம் செபத்திலும், ஒப்புரவு அருட்சாதனம் கேட்பதிலும் செலவழித்தார். இவரது வாழ்வும் பணியும் இன்று எமக்கும் விசேடமாக குருக்களுக்கும் பெரும் உதாரணமாகும். இவர் குருக்களின் பாதுகாவலராக விளங்குகிறார்.

6ம் திகதி இயேசுவின் உருமாற்றப் பெருவிழா. தனது பணிக்காலத்தின் இறுதியில் தன் சீடர்களை நம்பிக்கையில் பலப்படுத்தும் பின்னணியில் அமைந்ததே இந்த உருமாற்ற நிகழ்வு. கவர்ச்சியாலும், உலகக் கவலைகளாலும் எமது விசுவாசம் தளர்ந்துபோகும் வேளையில் இறைவன் எமது விசுவாசத்தை பலப்படுத்த பல சந்தர்ப்ப சூழ்நிலைகளை உருவாக்கித் தருகின்றார். எம் வாழ்வில் என்ன நடைபெற்றாலும் இறை நம்பிக்கையில் எப்போதும் உறுதியாக இருப்போம்.

வெல்வெரி தூய யாகப்பர் (யாக்கோபு) திருவிழாவை மறைமாவட்ட ஒன்றுகூடலாக யூலை மாதம் 30ம் திகதி சிறப்பித்தோம். இந்நிகழ்ச்சிகளையும் இடத்தையும் ஒழுங்கு செய்த அருட்தந்தை எஸ்.ஆர். ஜெயரெட்ணத் திற்கும் அடிகளாருக்கும் பலவழிகளிலும் உதவி செய்த நல் உள்ளங்களுக்கும் எமது வாழ்த்துக்கள். இந்த இடம் செழிக்கவேண்டும். பலரும் பயனடைய வேண்டுமென ஆசித்து எமது ஒத்துழைப்பை வழங்குவோம்.

எமது மறைமாவட்டத்தின் வளர்ச்சிக்காக நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு முயற்சியும் பயனுள்ளதாக அமைய ஆயராக எனது பணி எப்போதும் இறைவனின் விருப்பத்திற்கு அமைவாக இருக்க எனக்காகவும் என்னோடு உழைக்கும் குருக்கள் துறவறத்தவர் பொதுநிலையினருக்காகவும் செபிக்கும்படி தாழ்மையோடு கேட்டு முடிக்கிறேன்.

இறையாசீர் என்றும் உங்களோடு இருப்பதாக.

**பேரருட்திரு. கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்**
**திருகோணமலை மறைமாவட்டஆயர்.**

## வாரம் ஒருவரம் கேட்போம்

**திறமை**

- சரியான தீர்ப்பு வழங்குவதில் உன் திறமையைக் காட்டு.
- எல்லா நேரங்களிலும் விவேகத்தோடு நட.
- திறமையோடு செயல்படு.
- வாடிக்கையாளர்களிடம் விவேகத்தோடு நடந்துகொள்.
- உன் மேல் அதிகாரிகளிடம் நீ விரும்பும் சலுகைகளை உன் கீழ் வேலை செய்பவர்களிடமும் காட்டு.
- வேலையின் முக்கியத்துவத்திற்கு ஏற்ப அதைச் செயல்படுத்து.
- குழப்பமான சூழ்நிலையில் அதைப் பற்றி அறிந்தவர்களிடம் கேள்.

**படைப்புத்திறன்**

- உன்னுடைய படைப்புத் திறனில் கடவுளைப் புகழ்ந்தேற்று.
- உனக்குத் திறமை இருப்பின் வாழ்வுக்கும் உண்மைக்கும் வடிவமை.
- உனக்குச் சமையல் திறன் இருப்பின் அறுவகை சுவையூட்டும்,பசியூட்டும் உணவுகளைத் தயார் செய்.
- உன் தையல் கலையைப் பயன்படுத்திபுதுப் புது வண்ணவண்ண ஆடைகளை உருவாக்கு.
- கலை உணர்வோடு உன் வீட்டைஅலங்கரி.
- வண்ணவண்ண பூச்செடிகளால் உன் தோட்டத்தை அழகுசெய்.
- உன் குடும்பத்தில் உள்ளஅனைவரிடமும் கலை உணர்வை வளர்த்திடு.

**தொண்டு**

- பணத்தோடு தந்து,வருந்தும் ஏழைக்கு உதவிக்கரம் நீட்டு.
- கண் முகாம், மருத்துவ முகாம் போன்றவற்றில் சேர்ந்து ஏழைகளுக்கு உதவ முன் வா.
- பெண்களின் நல்வாழ்விற்குஉழைக்கும் இயக்கங்களில் சேர்ந்து தொண்டுசெய்.
- ஏழை நோயாளிக்குப் பண உதவிசெய்ய முன் வா.
- உன் வேலையாளின் முன்னேற்றத்தில் கருத்தில் கொள். அவர்கள் களைப்புறும் போது தேனீரும்,ஓய்வும் கொடுக்க மறவாதே.
- வாரத்தில் சிலமணி நேரத்தை நோயுற்றோரோடும் முதியோரோடும் செலவிடு.

**சோம்பேறித்தனம்**

- பகல் தூக்கத்தைத் தவிர்.
- பயனுள்ள நிகழ்ச்சிகளைத் தொலைக்காட்சியில் பார். பயனற்றவைகளைப் பார்க்காதே.
- உனது முக்கிய வேலைகளை ஒதுக்கி வைக்காதே.
- புத்துணர்ச்சியோடும் சுறுசுறுப்போடும் வாழ விளையாட்டுகளில் கலந்துகொள்.
- வீட்டுவேலைகளைஅனுதினமும் செய்யப் பழகிக்கொள்.
- அன்றாட வாழ்வில் மனதையும் உடலையும் ஆரோக்கியமான நிலையில் வைத்துக்கொள்.
- சோம் பேறித்தனத்தைத் தவிர்க்க சமூகச் சேவைகளில் ஈடுபடு.

அருட்பணி. ஆஞ்சலோபொன்னையா, ஜே.ச.     நன்றி: பீட்டர்தம்பி

## நீதியை வேண்டுவோம்...

அருட்பணி: N.C அருள்வரதன்.

✠ நாட்டிலே நல்லவைகள்
நலிவுறும் போது அங்கு
பூட்டிய கதவுகளாய்
பொலிவுகளும் மறைந்துபோக
ஆட்டிபடைக்கின்ற
அதர் மங்கள் சிரித்தெழவே
நியாயங்களங்கோ மறைகின்றதே

✠ உண்மையாய் வாழ்கின்ற
உயர்வான வாழ்வுகளும்
உண்மைக்காய் வாழ்கின்ற
உயர்வான மன நிலையும்
கண்களிலே தெரிவது
குறைந்துள்ள தென்றாலும்
மண்ணிலே அவர்களும் மறையவில்லையே

✠ துன்ப நிலை கண்டால்
துயர்துடைக்க முன்வந்து
தன்னால் முடிந்தவரை
தான் முயன்று துணைபுரிந்து
இன்னும் மனித மாண்பு
மறையவில்லை என்பதை
காட்டவும் மனிதர்கள் உள்ளார்களே

✠ வேதனைகள்கண்டாலே
வேறு வழி போகின்ற மனிதரும்
வறுமையும் பிணிகளையும்
வழிகளில் கண்டாலே
ஒதுக்கிப் போகின்ற மனிதரும்
இன்னும் மறையாமல்
இருப்பதும் தெரிகிறதே.

✠ சிறை கண்ட வாழ்வுகள்
போர் கண்ட முகாம்கள்
பசி கொண்ட வயிறுகளை
பார்த்திடவே யாருமின்றி
கைகழுவி விடும் போதங்கே
கண்கள் வடிக்கின்ற கண்ணீரை
காலங்கள் என்றுமே மறப்பதில்லையே

✠ போர்தந்த கொடுமைகளால்
பொலிவிழந்த வாழ்வுகளும்
இடர்களும் இன்னல்களுமாய்
இணைந்தொன்றாய் சேர்ந்து கொண்டே
வறுமைக்குள் புதையுண்ட முகாமைவிட்டு
வெளியேறிப் புதுவாழ்வை காண்பதற்கு
நீதியின் கண்களே திறக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹாய் குட்டீஸ்



**திருவிவிலிய புதிர் போட்டி எண் :27**

**2 சாமுவேல் 13 –24 அதிகாரங்கள்**

**01. தாமார் தன் தலை மீது எதை தூவினார்?**
விடை:........................................................................

**02. சிங்கம் போன்ற இரு மோவாபிய வீரரைக் கொன்றவன் யார்?**
விடை:........................................................................

**03. அப்சலோமுக்கு எத்தனை குழந்தைகள்?**
விடை:........................................................................

**04. தாவீதின் நண்பன் யார்?**
விடை:........................................................................

**05. உன்னதர்...................... அதிரச் செய்தார்?**
விடை:........................................................................

**06. உன் தந்தையும் அவர் தம் ஆள்களும்......... என்பதை நீ அறிவாய்?**
விடை:........................................................................

**07. யோனத்தானின் சவுலின் எலும்புகளை எங்கே அடக்கம் செய்தனர்?**
விடை:........................................................................

**08. ஈரா யாருடைய குருக்களில் ஒருவராக இருந்தான்?**
விடை:........................................................................

**09. சிமயி யாருடைய மகன்?**
விடை:........................................................................

**10. தாவீது ஏக்கத்துடன் எந்த வாயிலருகே குடிக்கத் தண்ணீர் கேட்டான்?**
விடை:........................................................................

**11. அப்சலோம் அதிகாலையில் எதன் அருகே நிற்பான்?**
விடை:........................................................................

**12. நாட்டுக்காக செய்த மன்றாட்டை ஆண்டவர் கேட்டதினால் இஸ்ரயேலி லிருந்து நீங்கியது எது?**
விடை:........................................................................

பெயர் :........................................................................
முகவரி :........................................................................
........................................................................
பங்கு :........................................................................

*@ அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி 10.09.2016*

**திருவிவிலிய புதிர் போட்டி எண் :26**


**2 சாமுவேல் 1 : 12 அதிகாரங்கள்**



### விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01. | 3 மாதங்கள் | (06 : 11) | 07. | பத்சேபாவுக்கு | (12 : 24) |
| 02. | ஏல்காத் அட்சூரிம் | (02 : 16) | 08. | பானா | (04 : 02) |
| 03. | நாத்தான் - அரசரிடம் (தாவீது) | (07 : 2- 3) | 09. | அப்னேருக்கு | (03 : 08) |
| 04. | மெபிபொசேத்து | (09 : 06) | 10. | 2 நாள் | (01 : 01) |
| 05. | தாவீது | (10 : 17) | 11. | மெதகம்மாவை | (08 : 01) |
| 06. | பாதங்களைக் | (11 : 08) | 12. | எலும்பும் | (05 : 01) |

**பங்குபற்றியவர்கள் - 43 பேர்**
**மிகச் சரியான விடையளித்தோர் - 21 பேர்**



### பரிசுக்குரியவர்கள்

| 1ம் பரிசு 500/= ரூபா | 2ம் பரிசு 300/= ரூபா | 3ம் பரிசு 200/= ரூபா |
|---|---|---|
| தேனுகி கிரிதரன்<br>இல: 70/33,<br>யாட் அப்ரோச் வீதி,<br>திருகோணமலை | எம். நிரஞ்சன்<br>7ம் வட்டாரம்<br>சல்லி | ஆன் வஜிரா. ஆர். ஏம்<br>இல: 21/3, வித்தியாலயம்<br>திருகோணமலை |

### பாராட்டுக்குரியவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 01. க. சுகந்தினி | - மூதூர் | 10. ஜே. ரி. காமலீன் | - மூதூர் |
| 02. ம. ஜைமன் | - மூதூர் | 11. செமீரா யோன்சன் | - பேராலயம் |
| 03. ஜொயலா போல் | - பாலையூற்று | 12. பியூலா டானியாலா ஆர். ஏப் | - பேராலயம் |
| 04. பிரிந்தா முருகேஸ் | - குவாடலூப்பே | 13. சரோனா ஆர். ஏப் | - பேராலயம் |
| 05. நிலாக்ஷா நிலோஜன் | - குவாடலூப்பே | 14. டொ. தர்க்ஷிக்கா | - மூதூர் |
| 06. எல். ரக்ஷனா | - உவர்மலை | 15. எஸ். ராகுல் | - பாலையூற்று |
| 07. குணசேகரன் தர்க்ஷினி | - பாலையூற்று | 16. ஜெ. கத்ரின்டா வென்டோட் | - சாம்பல்தீவு |
| 08. பு. ரிட்சியா | - பேராலயம் | 17. சி. ஹஸ்லியன் | - நிலாவெளி |
| 09. ஆர். எமில்ராஜ் | - செல்வநாயகபுரம் | 18. சு. சுவேக்கா | - பாலையூற்று |

**பங்கு பற்றிய அனைவருக்கும் பாராட்டுக்களும் நன்றிகளும்**

☞ 3ம் பக்கத் தொடர்ச்சி...

## உயர்ந்த உள்ளம்....

அதனால அவனால இங்க நம்ம நாட்டுக்கு இப்ப திரும்ப முடியாது 5, 6 வருடங்கள செல்ல வேண்டும். என கூறியதும் அப்பிள்ளைகள் மூவரும் முழந்தாலிட்டு இயேசப்பா எங்கட அப்பாவிற்கு கிடைத்திருக்கின்ற கம்பனியிடவேலை நேரத்திற்கு முடியேனும் எங்கப்பாவ நாங்க பார்க்கோனும். நீங்க தான் அவரோடகூட இருந்து அப்பாவின் கம்பனியை ஆசீர்வதிங்க என கண்ணீரோடு மன்றாடினர். என்னால் இக்கொடுமையைப் பார்க்க முடியவில்லை. இவர்கள் ஒவ்வொருவரின் மன ஏக்கம் என்னை தீயாய் சுட்டெரித்தது. நான் என்னிடமிருந்த பொருட்களையும் பணத்தையும் மேரியிடம் ஒப்படைத்து விட்டு அவ் விடத்தைவிட்டு விடைபெற்று வந்த வழியே திரும்பி சென்றேன். ஆனால் என் சிந்தனையெல்லாம் என் நண்பனின் வீட்டிலேயே உறைந்து போயிருந்தது. நான் திரும்பி என் நண்பனின் இருப்பிடத்திற்கு சென்றேன். அன்றிலிருந்து அணைக்கப்பட்ட அந்த வீட்டின் அடுப்பு மீண்டும் மூட்டப்பட்டது. ஆனாலும் அவர்களின் ஏக்கத்தை என்னால் போக்க முடியவில்லை. நான் மாத மாதம் பணத்தினை அனுப்புகின்றேன். அவ்களும் என் கணவனின் எங்கள் அப்பாவின் பணம் என சந்தோசமாக வாழ்ந்து வருகின்றனர்.

முற்றும்

ஆக்கம் : ச. மொறிஸ்ரெலா
இல: 74, அன்னை வேளாங்கன்னி வீதி,
பாலையூற்று, திருகோணமலை.

## பிறருக்காக உதவ விரைந்தவர்

"அதன்பின் மரியா புறப்பட்டு யூதேய மலை நாட்டிலுள்ள ஓர் ஊருக்கு விரைந்து சென்றார்.அவர் செக்கரியாவின் வீட்டை அடைந்து எலிசபெத்தை வாழ்த்தினார்" (லூக்1:39-40)

படிப்போ பட்டமோ பதவியோ பணமோ ஒருவருக்கு வந்துவிட்டால் பிறரை விடத் தாம் உயர்ந்தவர் எனும் மனப்பாங்கும் நடைமுறையும் எளிதில் அவருக்கு ஏற்பட்டு விடுவது அன்றாட சமூக வாழ்வில் நாம் அடிக்கடி காணும் மெய்மை இதனால் பிறர் தமக்குப் பணிந்திருக்க வேண்டும். தமக்கு மரியாதை காட்ட வேண்டும்.தமக்குப் பணி செய்து வாழ வேண்டும் என அவர் எண்ணவும் எதிர்பார்க்கவும் தொடங்கிவிடுகிறார்.

இன்றைய பட்டதாரிகள் அரசு அலுவலர்கள் அரசியல்வாதிகள் முதலாளிகள் என்பவர்களிடம் மட்டுமல்ல அருள்பணியாளர்கள் துறவியர் தலைமைப் பொறுப்பு ஏற்கும் பொதுநிலையினர் என்பவர்கள் பலரிடம் கூட இதே பாணியே காணக்கிடக்கிறது.

தங்களது பணமும் படிப்பும் பட்டமும் பதவியும் ஆற்றல்களும் திறமைகளும் முற்றிலும் தம் சுய முயற்சியால் தாங்கள் பெற்றவை அல்ல! மாறாக பெற்றோர் மற்றோர் பலர் உதவியால் இறைவனே நமக்குத் தந்த கொடைகள் என்பதை அவர்கள் மறந்துவிடுவதே இதற்குக் காரணம்.

இதனால்தான் புனித பவுல் கேட்கிறார் நீங்கள் மற்றவர் களை விட உயர்ந்தவர்கள் எனச் சொன்னவர் யார்? உங்களிடம் உள்ள அனைத்தும் நீங்கள் பெற்றுக்கொண்டும் பெற்றுக் கொள்ளாதது போல் பெருமை பாராட்டுவது ஏன்? "(1கொ4:7) நான் அதிகம் படித்தவன் உயர்பதவியில் இருப்பவன் அதிகத்திறமைகள் கொண் டவன் வயதில் பெரியவன் எனும் எண்ணத்தில் பிறர் தமக் குப் பணிந்து பணிபுரிந்து நடக்கவேண்டும் எனும் மனநிலை க்கு மரியா முற்றிலும் எதிர் மாதிரியாக விளங்குகிறார்.

அவர் இறைவனின் அருள் மிகப் பெற்றவள்! வானவரா-லேயே வாழ்த்தப்பெற்றவர்! இறைவனின் தாய் ஆகும் அணையற்ற பேற்றினைப் பெற்றவர்! ஆனால் அச்சிறப்பு எதனையும் மரியா தற்பெருமைக்கோ தம் வசதிகளையும் சுகங்களையும் பெருக்கிக் கொள்வதற்கோ காரணம் எனக் கருத வில்லை.

இறைவன் தமக்குத் தந்த உயர்வும் சிறப்பும் நம்மைப் பிறரிடமிருந்து தனிமைபடுத்தி உயர்த்துவதற்காக அல்ல! மாறாக அது பிறரது உயர்விற்காகவும் வளர்ச்சிக்காகவும் தாம் தொண்டு செய்வதற்கே எனும் உறுதிப்பாடும் அவரிடம் இருந்தன.

இதனால் இறைவனையே உதிரத்தில் சுமந்திடும் இணையற்ற பேற்றையும் பெறுமையையும் அடைந்திருந் தாலும் அவர் முதிர்வயதில் கருவுற்று ஆறாம் மாதத்தில் இருந்த உறவினர் எலிசபெத்துக்கு உதவிட மலை நாட்டுக்கு விரைந்து செல்கிறார்.

பிறரது தேவையை உணர்ந்தும் தாமதமோ, தயக்கமோ இன்றி உதவ விரையும் மரியாவின் பண்பைக் கானாவூர் திருமண நிகழ்விலும் நாம் தெளிவாகக் காண்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம் தம்மையே தாம் உயர்த்திக் கொள்வதல்ல உண்மையான உயர்வு! மாறாக பிறர் குறிப்பாக ஏழை எளியவர் உயர உதவுவதால் இறைவனால் தாம் உயர்த்தப்படுவதே உண்மையான சிறப்பு என அவர் உணர்ந்திருந்தார்.

மரியாவின் இந்த மனநிலையும் செயல் பாணியும் நமது வாழ்வுக்குச் சொல்லும் பாடங்கள் பல பிறரை வாழவைப்பதால் தான் நாமும் உண்மையிலே வாழுகி-றோம் அவர் உயர உதவும்போது தான் நாமும் உண்மையில் உயருகின்றோம். மனிதர் பார்வையில் இது தெரியாமல் இருக்கலாம். ஆனால் இறைவன் பார்வையில் இதுவே உண்மை.

மேலும் நமது படிப்பு உதவி திறமைகள் என்பன நமக்கு தரப்பட்டுள்ளது பிறரிடமிருந்து நம்மை நாம் உயர்த்திக் கொள்வதற்காக அல்ல! மாறாக அவற்றைப் பயன்படுத்திப் பிறரை உயர வைப்பதற்காகவே.

அவற்றைப் பயன்படுத்தித் தேவையில் இருப்போருக்கு உதவும்போது தான் நாம் உண்மையிலேயே இறைவனு க்கே பணிசெய்த பெருமையைப் பெறுகி றோம் "மிக சிறியோராகிய என் சகோதரர் சகோதர-ிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்" (மத் 25:40)! எனவே "உங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டி ருக்கும் ஆட்சியை உரிமைப் பேறாகப் பெற்றுக் கொள்ளுங்கள்" (மத்25:34) என இறைவன் நமக்குத் தருவதே உண்மையான உயர்வு நிலையான நிறைவான மாட்சிமை.

ஆக்கம் : தே. அல்போன்சு

# விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி – 19ன் முடிவுகள்

## திருத்தூதர் பணி அதி : 25 – 28 வரை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சு | ■ | வ | ர | வே | ற் | று | ■ | ம் | கா |
| ட | ■ | ல் | த | மு | மை | ள | இ | லு | ல |
| ர் | கா | தி | ■ | ஆ | ■ | இ | ன் | க | ந் |
| வீ | து | டு | றை | லோ | டி | த் | னே | ப | தா |
| சி | க | வி | து | ச | ட் | தா | றி | ம் | ழ் |
| ய | ள் | று | ந் | னை | மூ | லி | ன் | லு | த் |
| ஒ | ■ | ன் | செ | ■ | தீ | யா | தோ | ல் | தா |
| ளி | ■ | மூ | ■ | ஏ | ழு | நா | ள் | அ | ம |
| ■ | ல் | ட | ண் | கொ | க் | டை | வா | ■ | ல் |
| ஆ | னை | பி | ற | ப் | பி | த் | தா | ர் | ■ |

01. வரவேற்று
02. இளமை முதல்
03. சுடர் வீசிய ஒளி
04. அல்லும் பகலும்
05. காதுகள்
06. ஆலோசனை
07. வாடைக் கொண்டல்
08. மூன்று விடுதி
09. ஆணை பிறப்பித்தார்
10. காலந்தாழ்த்தாமல்.
11. ஏழு நாள்
12. செந்துறை
13. தோன்றினேன்
14. இத்தாலியா
15. தீ மூட்டி



**போட்டியில் பங்குபற்றியவர்கள் - 50 பேர்**
**சரியான விடை எழுதியோர் - 38 பேர்**

### *பரிசுக்குரியவர்கள்:*

| 1ம் பரிசு 500/= ரூபா | 2ம் பரிசு 300/= ரூபா | 3ம் பரிசு 200/= ரூபா |
|---|---|---|
| தனுஜா போல் | திருமதி ச. சகாயமேரி | பியூலா டானியலா ஆர்.எப். |
| இல: 20, யோசப்வாஸ் லேன் | 6ம் வட்டாரம், | இல:21/3, வித்தியாலயம் வீதி, |
| பாலையூற்று | சாம்பல்தீவு | திருகோணமலை |

பாராட்டுக்குரியவர்கள்

01. P. ஜெக்குலின் - கன்னியா
02. S. அனோஜா - நிலாவெளி
03. அ. கிஷான் - குவாடலுப்பே
04. தேனுகி கிரிதரன் - பேராலயம்
05. சு. எமில்ராஜ் - செல்வநாயகபுரம்
06. ச. நிலானி அனிற்றா - சாம்பல்தீவு
07. கொ. நிலக்ஷன் பாத்திலட் - பாலையூற்று
08. E. லினா சியேனி - நிலாவெளி
09. L.S. பியூரா - பேராலயம்
10. T. ஜான்சி - உவர்மலை
11. குணசேகரன் டிலுக்ஷன் - பாலையூற்று
12. அ. டேமியன் - நிலாவெளி
13. G. குணசேகரன் - பாலையூற்று
14. ஆன் வஜீரா R.F - பேராலயம்
15. நிலாக்ஷா நிலோஜன் - குவாடலுப்பே
16. சரோனா R.F - பேராலயம்
17. காமலீற்றா விமலதாஸ் - பேராலயம்
18. அ. மரியாள் - கண்ணியா
19. டொ. தர்சிகா - மூதூர்
20. ஜே. கொண்கிளேவியஸ் - பேராலயம்
21. திருமதி. ஸ். கவிதா - வெள்ளைமணல்
22. ச. மிதுக்ஷன் - பாலையூற்று
23. செமிரா யோண் - பேராலயம்
24. நா. மெற்றில்டா - பாலையூற்று
25. தே. சமில்டன் - நிலாவெளி
26. ரா. சாரிக்கா - இலிங்கநகர்
27. ட. ரக்க்ஷனா - உவர்மலை
28. பிரித்தா முருகேஸ் - குவாடலுப்பே
29. சி. ஹஸ்லியன் - நிலாவெளி
30. ஜே. புளோரிடா - பேராலயம்
31. சு. தினேஸ்ராஜ் - செல்வநாயகபுரம்
32. ச. சுஜீவன் - தூய யோசப்வான் சிறிய குருமடம்
33. நிரஞ்சு சொமிபாலா - பாலையூற்று
34. யு. பிளைக்ஷன் - நிலாவெளி
35. ரெ. மேரி றொக்ஷானி - இலிங்கநகர்

**பங்குபற்றிய அனைவருக்கும் வாழ்த்துக்களும், நன்றிகளும்.**

# அன்னைக்கு நிகர் அன்னையே அன்னையர் தின சிறப்புப் போட்டி

சரியான கவிதை வரிகள்

- ✔ அன்னைக்கு நிகராக யாருமில்லை-அவள்
- ✔ அன்பிற்கு நிகராக ஏதுமில்லையே.
- ✔ தன்னையே தந்த அன்னைக்கு நிகர்
- ✔ தரணியில் வேறதுமல்லையே
- ✔ தன் சுமைகள் சுமந்தே துயர்களேற்றே.
- ✔ நம் வாழ்வு வளமாக வழிகள் செய்த.
- ✔ அன்னையின் மேன்மையைப் புகழ்வோமே.

**பங்குபற்றியவர்கள் - 32 பேர். மிகச் சரியாக வடிவமைத்தவர்கள் - 10 பேர்.**

பரிசுக்குரியவர்கள்

| 1ம் பரிசு 400/= ரூபா | 2ம் பரிசு300/= ரூபா | 3ம் பரிசு200 /= ரூபா |
|---|---|---|
| இ.லினாசியேனி | திருமதி ச.சகாயமெரி | எஸ்.கன்சிவறா. |
| 3ம் வட்டாரம். | 6ம் வட்டாரம் | 3ம் வட்டாரம் |
| நிலாவெளி. | சாம்பல் தீவு. | நிலாவெளி. |

பராட்டுக்குரியவர்கள்

1. எ.கேமியன் கிளிட்டஸ்-நிலாவெளி
2. ஜே.எக்ஸ்.பிரசன்னா.-மட்டக்களப்பு.
3. எஸ்.அனோஜா.- நிலாவெளி
4. எ.ஜெசிந்தா.புளோறிடா.- நிலாவெளி
5. பிரிந்தா.முருகேஸ்.-குவாடலூப்பே
6. நிலாசா.நிலோஜன். குவாடலூப்பே
7. எ.றஜிந் வரோணியஸ்.- நிலாவெளி

குறிப்பு: பரிசுக்குரியவர்கள் தங்களது பரிசில்களை திருமறைக்கல்வி நடுநிலைய அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளவும்.

# விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி– 20

## உரோமையர் திருமுகம் - அதி 1 - 4 வரை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நீ | | | | | | | | | |
| ■ | நே | | | | | | | ■ | ■ |
| ■ | | | | | | | | | பா |
| எ | ■ | ■ | நா | | | | | ■ | ■ |
| | | | | | | | | | அ |
| | வா | ■ | | | | | | இ | ■ |
| | | ■ | | | | | | | க |
| | | ம | | | | | | ■ | ■ |
| ■ | ■ | | | | | | | | இ |
| த | | | | | | | | | ■ |

01. அரு......ம் அமை......யும்
02. இருண்...... போயி......று
03. நேர்......யுடை......ர்
04. கடின உ.......ளம்
05. மதிநு......பம்
06. இறைய......சம்
07. நீதி......கக் கருதி......ர்
08. எண்......ற்ற
09. வாய்......
10. பார்......யற்றோ......க்கு
11. தந்......யாக்......கிறேன்
12. நா...... வயது

பெயர் ..............................

முகவரி ..............................

..............................

பங்கு ..............................

முடிவுத்திகதி 10.09.2016

# மறைக்கல்வி கற்போம் - 18

**01. நாம் எவ்வாறு இறையன்பை காட்ட முடியும்?**
எல்லாவற்றிற்கும் மேலான இறைவனையும் அவருக்காக நம் அயலவர்களையும் நாம் அன்பு செய்யும் போது.



**02. இறைவன் எம்மை தீர்ப்பிடும் நேரம் எப்போது?**
மரிக்கும் போதும் , உலக முடிவின் போதும்

**03. திருமரபு என்பது எனன?**
இறைவனால் அருளப்பட்ட படிப்பினைகள் பரம்பரை பரம்பரையாக வாய் மொழியாகக் கற்பிக்கப்பட்டு வருவது.

**04. இறைத் தூதர்கள் என்போர் யார்?**
மெய்யுடல் அற்றவர்களான ஞானமும் தூய்மையும் உள்ள ஆவிகளாவர்.

**05. மனிதன் என்பவன் யார்?**
இறைசாயலில் படைக்கப்பட்ட உடல், உள்ளம், ஆன்மா ஆகியவை கொண்ட படைப்பாவான்.

**06. சென்ம பாவமில்லாமல் பிறந்தவர்கள் யார்?**
ஆண்டவர் இயேசுவும் , அன்னை மரியாளும் மட்டுமே

**07. அன்பு என்பது என்ன?**
எல்லாவற்றிற்கும் மேலான இறைவனையும் இறைவனுக்காக தம்மைப் போல் தம் அயலவர்களையும் அன்பு செய்வதற்கு எமக்கு கிடைக்கும் இறையருளே.

**08. அர்ச்சிக்ஷ்ட சிலுவை அடையாளத்தை நெற்றியில் வரைவதன் காரணம் என்ன?**
அனைத்தையும் படைத்து எல்லோரையும் காத்து வருகின்ற கடவுள் எப்போதும் நம் நினைவில் இருக்க வேண்டும் என்பதை உணர.

**09. உதட்டில் வரையும் சிலுவையின் காரணம்?**
நாம் பேசுகின்ற வார்த்தைகள் கடவுளிடமிருந்து வரும் வார்த்தைகளாக இருக்கவும் பிறரது வளர்ச்சிக்கு உதவும் வார்த்தைகளாக இருக்கவும் தீய சொற்கள் ஏதும் பேச மாட்டேன் என்று மனவுறுதியுடன் இருக்கவும்.


**10. அருள் நிறைந்த மரியே செபத்தின் முக்கிய மூன்று பிரிவுகள் எவை?**
1. வான தூதர் கபிரியேலின் வாழ்த்துரை (லூ 1 : 28)
2. எலிசபெத்தின் வாழ்த்துரை (லூ 1 : 42)
3. பரிந்துரை செய்ய விண்ணப்பம்

# ஆனந்த வெள்ளம் ...FR NC...

- எல்லா மனங்களும் ஒன்றாகியே
- எங்கள் நாடொன்ற எண்ணங்களே
- உறவோடு அன்பாக வாழும் போதே
- எல்லோர் மனதிலும் வேண்டுமே
- இனிதான வாழ்வங்கு உதயமாகி
- ஆனந்த வெள்ளமாய் பெருகிடுமே.
- ஆறுவரிகள் கொண்ட கவிதைகள்
- மாறியுள்ள வரிகளை
- வேறொரு தாளிலே சரி செய்யுங்கள்
- எல்லோரும் சரியாக வடிவமைத்தால்
- குலுக்கல் முறையிலே பரிசுகள்.
  - 1ம் இடம்.400/=
  - 2ம் இடம்300/=
  - 3ம் இடம்200/=
- சரியாக வடிவமையுங்கள்
- பரிசினைப் பெறுங்கள்.
- எல்லோரும் கலந்து கொள்ளலாம்.
- முடிவுத் திகதி.10.09.2016.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெல்வேரி தூய யாகப்பர் திருவிழா



திருகோணமலை வெல்வேரியில் அமைந்துள்ள தூய யாகப்பர் திருத்தலத்தில் வருடாந்த திருவிழா 30.07.2016 அன்று எமது மறைமாவட்டத்தின் ஆயர் அதி. வந்தனைக்குரிய கலாநிதி கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை தலைமையில் திருவிழா கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இத் திருவிழா திருப்பலியானது தமிழ் சிங்களம் ஆகிய இரண்டு மொழிகளிலும் இடம் பெற்றமை குறிப்பிடத் தக்கதாகும். திருவிழா திருப்பலியில் கலந்து பங்கேற்க மறைமாவட்டத்திலுள்ள பங்குகளில் உள்ள சகல அருட்பணியாலர்கள் அருட்சகோதரிகள் இறைமக்கள் கலந்து சிறப்பித்தனர்.

**மறைமாவட்ட செய்திகளையும் தரவு விபரங்களையும் அறிந்து கொள்வதற்கு பின்வரும் வலை தளத்தை பயன்படுத்தலாம்**

WWW

01. website : diocese of trincomalee.org
02. Facebook : diocese of trincomalee
03. charity : diocesan charity.

தகவல் : ஆயர் பனிமனை, திருகோணமலை.

**diocesan charityக்கு உதவி செய்பவர்கள் கீழ் வரும் முகநூலில் ( facebook) தொடர்பு கொள்ளலாம்.**

Seylan Bank Trincomalee Branch.
Ac. No : 0880-12709072-101

முகநூல் :
diocesan charity

தகவல் : ஆயர் பனிமனை, திருகோணமலை.

## நன்றியும் வரவேற்பும், ஆயர்த்துவ ஒருவருடமும், தையல் பயிற்சி சான்றிதழ் நிகழ்வும்



தேசிய இயக்குனருடைய புதியவரவேற்பும்,முன்னைய நாள் இயக்குனருக்கு நன்றி கூறலும், எகெட் கரித்தாஸ் நிறுவனத்தினால் நடாத்தப்பட்டதையல் பயிற்ச்சிக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் மற்றும் ஆயர் அவர்களின் ஆயத்துவப் பணிவாழ்வின் ஒரு வருடநிறைவும் வெகுவிமரிசையாக எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் அனுசரனையுடன் மறைக்கல்வி நடுநிலைய ஜோசப் வாஸ் கேட்போர் கூடத்தில் 20.07.2016 அன்று நடைபெற்றது.

இவ் நிகழ்வில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

## A Seminar-Workshop on "Shepherding Families in Asia"

**"இன்றைய காலத்தில் ஆசிய நாடுகளில், குடும்பங்கள் எதிர்நோக்கும் சவால்களும் அதற்கான தீர்வுகளும்".**

தாய்லாந்து நாட்டில் கடந்த மே மாதம் 16 - 20 வரை நடைபெற்ற "Shepherding Families in Asia" எனும் மகாநாட்டில் 'ஆயர்கள், குருக்கள் மற்றும் பொதுநிலையினருக்கான இன்றைய காலத்தில் குடும்பங்கள் எதிர்நோக்கும் சவால்களும் அதற்கான தீர்வுகளும்' என்னும் தலைப்பில் இடம் பெற்ற செயலமர்வில் இலங்கையிலிருந்து ஆயர்களான அதிவந். வியான்னி பெர்ணாண்டோ (கண்டி மறைமாவட்டம்), அதிவந். நோபர்ட் அந்திராடி (அநுராதபுரம் மறைமாவட்டம்), அருட்பணி குளோட் நிஷாந்த நோனீஸ் (தேசிய குடும்ப வாழ்வுப்பணி இயக்குனர்) ஆகியோர் உட்பட 16 பேர் பங்குபற்றியிருந்தனர்.







எமது மறைமாவட்டத்தின் சார்பில் குடும்ப வாழ்வுப்பணி இயக்குனர் அருட்பணி. ஹெக்டர் ஜீட் ஜோண்சன் அடிகளாரும், குடும்ப வாழ்வுப்பணி ஊக்குவிப்பாளர்களான திரு. திருமதி. ஜேம்ஸ் வில்லியம் லெப்பன் தம்பதியினரும் கலந்து பல அனுபவப் பகிர்வுகளையும் பெற்றுக் கொண்டனர். இவர்கள் பணி சிறக்க வாழ்த்துவோம்.

**தகவல் : குடும்ப வாழ்வுப்பணியகம், திருகோணமலை மறைமாவட்டம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"கடவுளே தூயதோர் உள்ளத்தை என்னுள்ளே படைத்தருளும். (தி:பா 51:10)"**